258, எம் வின்சென்ட்
பெரேரா மாவத்தை
கொழும்பு 14
0114700800

# யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனம் ரூபா 10 மில்லியன் பெறுமதியான 32 ஒட்சிசன் செறிவூட்டி சாதனங்களை சுகாதார அமைச்சிற்கு நன்கொடையளித்துள்ளது

**கொழும்பு, ஜூலை 07, 2021:** விரைவாக விற்பனையாகின்ற நுகர்வோர் தயாரிப்புக்கள் தொடர்பில் நாட்டின் மிகப் பெரிய நிறுவனங்களில் ஒன்றான யூனிலீவர் ஸ்ரீலங்கா, தற்போது பரவி வருகின்ற தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற முயற்சிகளுக்கு வழங்கி வருகின்ற தனது தொடர்ச்சியான உதவிகளின் ஒரு அங்கமாக, ரூபா. 10 மில்லியன் பெறுமதியான 32 ஒட்சிசன் செறிவூட்டி சாதனங்களை சுகாதார அமைச்சிற்கு நன்கொடையளித்துள்ளது. இந்த கூட்டாண்மை மூலம், ஒட்சிசன் தேவை காணப்படுகின்ற அரசாங்க வைத்தியசாலைகளுக்கு இந்த ஒட்சிசன் செறிவூட்டி சாதனங்கள் வழங்கப்படும்.

இந்த நன்கொடையை யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் வாடிக்கையாளர் மேம்பாட்டுத் துறைப் பணிப்பாளரான அருண மாவில்மட, சட்டத் துறைத் தலைமை அதிகாரியும், கம்பனி காரியதரிசியுமான லக்சரா மாரப்பன, ஊடக மற்றும் விளம்பர ஊக்குவிப்புச் செயற்பாடுகளுக்கான தலைமை அதிகாரியான சண்ண தென்னக்கோன் ஆகியோர் சுகாதார அமைச்சின் அரங்கத்தில் வைத்து சுகாதார அமைச்சரின் தனிப்பட்ட செயலாளரான காஞ்சன ஜெயரட்ண, சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளரான வைத்தியர் சுனில் டி அல்விஸ், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமான வைத்தியர் அசேல குணவர்த்தன, உயிரியல் மருத்துவ சேவைகளுக்கான பிரதிப் பணிப்பாளர் நாயகமான ஜனப்பிரிய கருணாதிலக மற்றும் சப்பிரகமுவ மாகாண சுகாதார பணிப்பாளரான வைத்தியர் கபில கன்னங்கர ஆகியோர் முன்னிலையில் சுகாதார அமைச்சின் செயலாளரான மேஜர் ஜெனரல் வைத்தியர் சஞ்சீவ முனசிங்க அவர்களிடம் கையளித்து வைத்துள்ளனர்.

யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பங்களிப்பிற்கு நன்றி தெரிவித்த சுகாதார அமைச்சின் செயலாளரான மேஜர் ஜெனரல் வைத்தியர் சஞ்சீவ முனசிங்க அவர்கள் இது தொடர்பில் கூறுகையில், *"யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனம் தொற்றுநோய் நிலைமையின் போது தொடர்ச்சியாக ஆதரவளித்து வருகின்றமைக்காக நாங்கள் மிகவும் நன்றிக்கடன் பட்டுள்ளோம். நம் மக்களைப் பராமரிக்க சாத்தியமான அனைத்து மருத்துவ உதவிகளும் தேவைப்படுகின்ற ஒரு மிகவும் முக்கியமான தருணத்தில் இந்த நன்கொடை கிடைக்கப்பெற்றுள்ளது. நிறுவனத்தின் தாராள சிந்தனை கொண்ட முயற்சிகளுக்கு நாங்கள் நன்றி தெரிவிப்பதுடன், எங்கள் நாட்டிற்கு நிவாரணம் மற்றும் உதவிகளை வழங்க யூனிலீவர் நிறுவனத்துடன் இணைந்து செயற்படுவதற்கான ஒத்துழைப்புகளை மேலும் எதிர்பார்க்கிறோம்,"* என்று குறிப்பிட்டார்.

இந்த நன்கொடை குறித்து யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் சபைத் தலைமை அதிகாரியான ஹஜார் அல.்.பி.்.பி அவர்கள் கூறுகையில், *"இந்த இன்னல்மிக்க காலகட்டங்களில், தரமான சுகாதார சேவைகளை வழங்குவது காலத்தின் தேவையாகிவிட்டது. 83 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையர்களின் வாழ்க்கையில் தன்னை ஆழமாக பின்னிப் பிணைத்துள்ள ஒரு நிறுவனம் என்ற வகையில், தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதை நோக்கமாகக் கொண்ட மருத்துவ முயற்சிகளுக்கு ஆதரவளிப்பது நமது கடமை என்றே நாங்கள் கருதுகிறோம்,"* என்று குறிப்பிட்டார்.

யூனிலீவர் நிறுவனம் 2020 மார்ச் முதல் கொவிட்-19 நிவாரண முயற்சிகளுக்காக ரூபா 60 மில்லியனுக்கும் மேற்பட்ட தொகையை பங்களிப்பாக வழங்கியுள்ளதுடன், அதன் பல வர்த்தகநாமங்கள் பொதுமக்கள் மத்தியில் விழிப்பூட்டல் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் முன்னின்று உழைத்துள்ளன. அதன் சுகாதாரம் தொடர்பான வர்த்தகநாமமான லை.்.வ்போய் நாடு முழுவதும் 100 லை.்.வ்போய் கை கழுவும் மையங்களை அமைத்துள்ளதுடன், சுகாதாரம் மற்றும் துப்புரவு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த சமூகங்கள் மத்தியில் தொடர்ந்து ஈடுபாடுகளை முன்னெடுத்து வருகிறது. யூனிலீவர் நிறுவனத்தின் முயற்சிகளில் கொவிட்-19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதிக்கு நிதி நன்கொடை அளித்தமை மற்றும் தொற்றுநோயைத் தடுக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் வகையில் செயல்படும் அரசாங்கம் மற்றும் தொடர்புடைய அமைப்புகளுக்கு தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள், செயற்கைச் சுவாச சாதனங்கள் (வென்டிலேட்டர்), முகக்கவசங்கள் மற்றும் அத்தியாவசிய யூனிலீவர் தயாரிப்புகளை வழங்கியமை ஆகியனவும் அடங்கியுள்ளன.